50—

கட்டட வசதி

***1751—திரு. அ. கணேஷ்குமார்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செஞ்சி தொகுதி, மேல்மலையனூர் ஒன்றியம், கொழப்பலூர் நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

செஞ்சி தொகுதி, மேல்மலையனூர் ஒன்றியத்தில் உள்ள கொழப்பலூர் முழுநேர நியாய விலைக் கடை தற்போது வாடகைக் கட்டடத்திலே செயல்பட்டு வருகிறது. இந்நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்டுவதற்குத் தேவையான சொந்த இடமோ, நிதி வசதியோ சங்கத்திற்கு இல்லை. இவ்வாறு சொந்தக் கட்டடம் இல்லாத நியாய விலைக் கடைகளுக்கு அரசு கட்டடம் கட்டித் தரக்கோரி திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள்.*

திரு. அ. கணேஷ்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுக்கு நன்றி. அந்த மேல்மலையனூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட கொழப்பலூர் கிராமத்தில், கிராமத்துப் பொதுமக்களே 10 செண்ட் இடத்தைக் கண்டறிந்து பொதுவான இடத்தைத் தேர்வு செய்து வைத்திருக்கிறார்கள். அதற்கு நிதியாதாரம் வழங்கி, மாவட்ட ஆட்சியர் அவர்கள் மூலமாகவோ, திட்டப் பணி அலுவலர் அவர்கள் மூலமாகவோ, ஏதோ ஒரு வகையில் ஆவன செய்து, அங்கு கட்டடம் கட்டித் தருவதற்கு தயவுகூர்ந்து பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

2011 ஆகஸ்ட் 23]

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய ஆர்வம் மிகுதியாக இருப்பதால் மாண்புமிகு உறுப்பினர் சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து கட்டிக் கொடுப்பாரேயானால் மிகவும் சிறப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 51, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆர். சாந்தி, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10—25

51—

சுற்றுச்சூழல் பாதுகாப்பு

***570—திருமதி ஆர். சாந்தி:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலை ஒன்றியத்திலுள்ள மலையில் மரங்கள் வெட்டுவதைத் தடுப்பதற்கும், பசுமையைக் காப்பதற்கும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கொல்லிமலை ஒன்றியத்திலுள்ள மலையில், மரங்கள் வெட்டுவதைத் தடுப்பதற்கு, தமிழ்நாடு வனச் சட்டத்தின்படியும், தமிழ்நாடு மலைதள பாதுகாப்புச் சட்டத்தின்படியும், உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், வனம் மற்றும் தனியார் காடுகள் பகுதிகளில் சட்டத்திற்குப் புறம்பாக மரங்கள் வெட்டப்படுவதைத் தடுப்பதற்கு, வனப் பணியாளர்கள் தீவிர கண்காணிப்புப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். கொல்லிமலை வனப் பகுதிகளில், தமிழ்நாடு காடுகள் வளர்ப்பு மற்றும் வேங்கைத் தோட்டங்கள் எழுப்பும் திட்டங்களின் மூலம் 75,000 மரக்கன்றுகள் நடப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகின்றன. மேலும், இப்பகுதிகளில் பசுமையை அதிகரிக்கும்